செய்தி வெளியீடு எண்: 842 நாள்: 27.11.2019

# செய்தி வெளியீடு

## சென்னை, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில்

## ‘சொற்குவைச் சொல்லாக்கப் பயிலரங்கம்’ !

## சென்னை, கல்லூரிக் கல்வி இயக்கக இயக்குநர் பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்!

கற்காலம் தொடங்கி கணினிக் காலம் வரை தமிழுக்குப் பெருமை சேர்ப்பது அதன் தனிப்பெரும் சொல்வளமே. அத்தகைய தமிழ்மொழியின் சொல்வளத்தை ஒன்று திரட்டி, ஒரே தளத்தில் வழங்கும் உயரிய நோக்கத்தோடு தமிழ்நாடு அரசால் 2018–ஆம் ஆண்டு , **‘சொற்குவைத்’** திட்டம் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டப்பேரவை 110–விதியின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டத்திற்குத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வழியாகச் செயல்படுத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சொற்களைக் காப்பதன் வாயிலாக மொழியைக் காக்க முடியும் என்றும், சொல்வளத்தைப் பெருக்குவதன் வாயிலாகத் தமிழ்மொழியை வளர்த்தெடுக்க முடியும் என்றும் உணர்ந்து உருவாக்கப்பட்ட சொற்குவைத் திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்த கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் தகுந்த களமாகத் தமிழ்நாடு அரசு தேர்வு செய்தது.

எனவே, சொற்குவைத் திட்டத்தைக் கல்லூரி மாணவர்களிடையே பரப்பும் முயற்சியில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் கல்லூரிகள்தோறும் அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 12 கல்லூரிகளில் அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கங்களை நடத்தியதன் மூலம் ஏராளமான மாணவர்களிடம் ‘சொற்குவை’ கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்கள் இதுவரை 22,376–க்கும் மேற்பட்ட புதிய தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்கியிருக்கிறார்கள். 25,000 மாணவர்கள் தூய தமிழில் கையொப்பமிட்டு அதனை நினைவுப் பரிசாக வழங்கியிருக்கிறார்கள். இத்தகைய விழிப்புணர்வும் செயல்பாடுமே தமிழ்வளர்ச்சிக்கும் தமிழ்ப் பாதுகாப்பிற்கும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக உலகத் தமிழறிஞர்கள் பாராட்டி வருகிறார்கள்.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் மற்றும் சென்னை, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனமும்

இணைந்து நடத்தும் ‘ சொற்குவைச் சொல்லாக்கப் பயிலரங்கம்’ **28.11.2019** வியாழனன்று அக்கல்லூரியின் கலையரங்கில் காலை **9.30** மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பயிலரங்கில், விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பு முதல்வர் முனைவர் ம.ச. தில்லைநாயகி அவர்கள் வரவேற்புரை வழங்க, அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்கள் நோக்கவுரையாற்றவுள்ளார்.

சென்னை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் முழுக் கூடுதல் பொறுப்பு இயக்குநர் முனைவர் சி. ஜோதிவெங்கடேஸ்வரன் அவர்கள் வாழ்த்துரையாற்ற, சென்னை, பொதிகைத் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு இயக்குநர் திரு. மா. அண்ணாதுரை அவர்கள் சிறப்புரை வழங்கவுள்ளார்.

மேலும், பயிலரங்கில் எழுத்தாளர், கவிஞர் ஜெயபாஸ்கரன், தொல்காப்பியர் தமிழ்ச் சங்கத் தலைவர் புலவர் வெற்றியழகனார், சென்னை கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் உதவி இயக்குநர் திரு. அ. மதிவாணன், ‘அறிவியல் ஒளி’ மாத இதழின் இதழாசிரியர் திரு. நா. சு. சிதம்பரம் ஆகியோர் கருப்பொருளுரையாற்றவுள்ளனர்.

நிறைவாக, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் பதிப்பாசிரியர் முனைவர் மு. கோமதிவள்ளியம்மை அவர்கள் நன்றியுரை நவிலவுள்ளார்.

சொற்களின் வளமே மொழியின் நலம் என்ற விழிப்புணர்வை இளந்தலைமுறையினர்க்கு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்தச் ‘சொற்குவைச் சொல்லாக்கப் பயிலரங்கம்’ நடைபெறவுள்ளது. எனவே, இப்பயிலரங்கம் பற்றிய செய்தியைத் தங்கள் ஊடகத்தின் (செய்தித்தாள் / தொலைக்காட்சி) இன்றைய நிகழ்ச்சிப் பகுதியில் வெளியிடுவதோடு, பயிலரங்க நிகழ்விற்குத் தங்கள் செய்தியாளரையும் அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**